

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (27.1.2025) விழுப்புரம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள். முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஸ்ருதஞ்ஜெய் நாராயணன், மாவட்ட வருவாய் அலுவலர் கி. அரிதாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இலக்கணம், இலக்கியம் உள்ள ஒரே மொழி நம் மொழி தான்!

# உலகத்தையே ஆளக்கூடிய சக்தி தமிழ்மொழிக்கு உள்ளது!

## திண்டுக்கல் வீரவணக்கநாள் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி பெருமிதம்!

திண்டுக்கல், ஜன.28-

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்கநாள் பொதுக்கூட்டம், திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். திண்டுக்கல் தெற்கு ஒன்றியச் செயலாளர் வெள்ளிமலை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அஸ்வின்பிரபாகரன் ஆகியோர் வரவேற்றனர். துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ. பெரியசாமி, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் கோவை திராவிட மணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர்.



**இதில் அமைச்சர் இ. பெரியசாமி பேசியதாவது:-**

உலகில் உள்ள மொழிகளில் இலக்கணம், இலக்கியம் உள்ள ஒரே மொழி தமிழ் மொழி தான். உலகத்தையே ஆளக்கூடிய சக்தி தமிழ் மொழிக்கு உள்ளது.

பிரதமர் வீடு கட்டும் திட்டத்திற்கு ஒன்றிய அரசு ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் மட்டுமே வழங்குகிறது. மீதமுள்ள தொகையான ரூ.1 லட்சத்து 74ஆயிரத்தை தமிழக அரசு வழங்குகிறது. தமிழகம் முழுவதும் வேலை வாய்ப்பற்று இருந்தவர்களில் 20 லட்சம் பேருக்கு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்பட்டுள்ளது. ஒன்றியத்தில் உள்ள மதவாத ஆட்சிக்கு முடிவு கட்டும் விதமாகவே இனி நமது போராட்டம் இருக்க வேண்டும். இந்தியாவில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும். அதற்கு நாம் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், தமிழ்மணி, கனக துரை, மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் நாகராஜன், பிலால் உசேன், மார்கிரேட் மேரி, மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், வடக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.அக்பர், மாவட்ட மாண வரணி துணை அமைப்பாளர்கள் துரைப் பாண்டி, பாஸ்கரன், பள்ளபட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் பரமன், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் ப.க.சிவகுருசாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஆத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராமன், கொடைக்கானல் கீழ்மலை செய லாளர் வி.எம்.எ.கருமலைப்பாண்டி, பேரூர் கழக செயலாளர்கள் கன்னிவாடி இளங்கோவன், ஸ்ரீராமபுரம் ராஜா, சின்னாளபட்டி ஆ. மோகன்ராஜ், நிலக்கோட்டை ஜோசப் கோவில் பிள்ளை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கணேசன், மருத்துவ அணி அமைப்பாளர் அமிர்தகடேஸ்வரர், பொறியாளர் அணி எம்.செந்தில்குமரன், விளையாட்டு மேம்பாட்டு அணி பார்த்தசாரதி, விவசாய அணி இல.கண்ணன், மாநகர பகுதி செயலாளர்கள் ராஜேந்திரகுமார், பஜ்ருல் ஹக், கொடைக்கானல் நகர செயலாளர் முகமது இப்ராகிம், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், இறுதியில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் சூசைராபர்ட் உட்பட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மாணவரணி நிர்வாகி கள் திரளாக கலந்து கொண்டனர்.

# பழனி தைப்பூசத் திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர்கள் அர. சக்கரபாணி – பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

பழனி, ஜன.28-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான பெரியநாயகி அம்மன் திருக்கோயிலில் நேற்று (27.01.2025) ரூ.49 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்ட மரத்தேர் வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து, பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் தலைமையில் தைப்பூசத் திருவிழாவினையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

***இக்கூட்டத்திற்கு பின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,***

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட பிறகு, திருச்செந்தூர் சூரசம்ஹாரம், திருவண்ணாமலை தீபத்திருவிழா, ஸ்ரீரங்கம் வைகுண்ட ஏகாதசி பெருவிழா, திருத்தணி ஆடிக்கிருத்திகை, பழனி தைப்பூசம், மற்றும் பங்குனி உத்திரம், மதுரை சித்திரை பெருவிழா, கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் போன்ற பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் கூடுகின்ற திருவிழாக்களை சிறப்பான முறையில் நடத்திடும் வகையில் முன்கூட்டியே அனைத்து துறை அலுவலர்களின் ஆய்வு கூட்டம் நடத்தி இறையன்பர்கள் எளிதில் தரிசனம் மேற்கொள்ளும் வகையிலும், அவர்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையில் வருகின்ற பிப்ரவரி 5 ஆம் தேதி தொடங்கவுள்ள பழனியில் தைப்பூசத் திருவிழாவையொட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வு கூட்டம் இன்று நடைபெற்றது.

கடந்தாண்டு தைப்பூசத் திருவிழாவில் சுமார் 12 இலட்சம் பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்தாண்டு அந்த எண்ணிக்கை கூடும் என கணக்கிடப்பட்டுள்ளது. அவ்வாறு வருகைதரும் பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கும், இறை தரிசனத்திற்கும், உணவு, தங்குமிடங்கள், பாதயாத்திரை வருகின்ற பக்தர்களுக்கான தங்கும் மண்டபங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி, பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள உள்ளோம்.

இந்த ஆட்சி ஏற்பட்டபின், தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரத்தில் பழனிக்கு பாதயாத்திரையாக வருகின்ற பக்தர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த அன்னதானம், 10,000 லிருந்து 20,000 என உயர்த்தப்பட்டு இருபது நாட்களுக்கு 4 இலட்சம் பக்தர்களுக்கு வழங்கப்படுகிறது. பழனி திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 6,000 மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டியோடு, மதிய உணவும் வழங்கப்பட்டு வருகிறது. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு ஏற்கனவே குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதன் உபகோயில்களில் 7 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதோடு, மீதமுள்ள 19 திருக்கோயில்களுக்கும் இந்த ஆண்டு இறுதிக்குள் குடமுழுக்கு நடத்தி முடிக்கப்படும். இதன்மூலம் பழனி திருக்கோயில் மற்றும் அதன் உபத்திருக்கோயில்களில் ஆகமவிதிப்படி முழுமையாக குடமுழுக்கு நடத்தி முடித்த ஆட்சியாக இந்த ஆட்சி வரலாற்றில் இடம் பிடிக்கும்.

பழனியில் உள்ள தங்கும் விடுதிகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக வரப்பெற்ற புகார்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதுதொடர்பாக ஒரு கூட்டத்தினை நடத்திட உள்ளோம். பக்தர்களுக்கு சிரமம் இல்லாத வகையில் சாதாரண நாட்களில் வசூலித்த கட்டணங்களையே தைப்பூச விழாவின்போதும் வசூலிக்க உத்தரவு பிறப்பிக்கப்படும். மேலும், உணவகங்களில் வழங்கப்படும் உணவுகளின் தரம் உறுதி செய்யப்படும். மேலும், தனிநபர்கள் வழங்கும் அன்னதானத்தை வரவேற்பதோடு அவர்களும், பக்தர்களுக்கு எவ்வித உடல் உபாதைகளும் ஏற்படாத வகையில் தரத்தோடு உணவினை தயார் செய்து வழங்கிட வேண்டும். பக்தர்களின் நலனும் முக்கியம் அதே போல் அன்னதானம் வழங்குவேன் என்று வருகின்றவர்களுக்கும் இந்த அரசு ஆதரவாக இருக்கும்.

கேட்டதை தந்து, கேளாததையும் தருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தைப்பூசம் மற்றும் அதனையொட்டி வருகின்ற இரண்டு நாட்கள் என மொத்தம் 3 நாட்களுக்கு சிறப்பு தரிசனக் கட்டணம் ரத்து செய்யப்படும். கடந்த ஆட்சியில் திருக்கோயில்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து தொகுப்பூதியத்தில் பணியாற்றியவர்களை பணி நிரந்தரம் செய்வோம் என்று அறிவித்தார்கள். அந்த ஆட்சி முடிகின்ற வரையில் ஒருவரை கூட பணி நிரந்தரம் செய்யவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் 1,289 பணியாளர்களை பணி வரன்முறை செய்து நிரந்தரம் செய்துள்ளோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட ஆலோசனை குழுவில், கூடுதலாக 500 தற்காலிக பணியாளர்களை பணி நிரந்தரம் செய்வதற்கு முடிவு எடுக்கப்பட்டு, அவர்களும் விரைவில் பணிவரன்முறை செய்யப்பட உள்ளனர். நாதஸ்வரம் வாசிப்பவர்களையும் பணி நிரந்தரம் செய்வதற்கு தகுதிகள் இருந்தால் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு உத்தரவு வழங்கப்படும்.

பழனி திருக்கோயிலுக்கு பணியாளர்களை தேர்வு செய்வதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு சுமார் 3 இலட்சம் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அப்பணியிடங்களுக்கு நேர்காணல் நடத்தி அவர்களில் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்பணியிடங்களை பெற்று தருவதாக முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக தேனியில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஆட்சியானது எல்லோருக்கும் எல்லாமுமான ஆட்சியாகும். அவரவர் விரும்புகின்ற வகையில் அவர்களது மதவழிபாட்டினை அமைதியான முறையில் கடைபிடிக்க வேண்டும் என்பதை கொள்கை மற்றும் இலட்சியங்களாக கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைதி தவழுகின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார். ஆகவே, காலங்காலமாக கடைபிடிக்கப்படும் வழிபாட்டுகளுக்குட்பட்டு நடைபெறுகின்ற செயல்களை இந்து சமய அறநிலையத்துறை அனுமதிக்கும். அதை மீறுகின்ற பட்சத்தில் நிச்சயமாக அதற்கு தடையாகவும் இருக்கும்.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள 50 சென்ட் நிலம் தொடர்பாக 1930 ஆம் ஆண்டிலிருந்து இது சம்பந்தமாக தொடர் நடவடிக்கைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. 1930 ல் லண்டன் பிரிவியூவில் இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்த போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதர வழக்குகளிலும் இதனை போன்று தான் தீர்ப்பு வந்துள்ளது. தற்போது ஒரு சில ஆதீனபெருமக்கள் இது சம்பந்தமாக ஒரு குழுவினை அமைத்து முடிவெடுக்கலாம் என்று தெரிவித்துள்ளார்கள். இது சம்பந்தமாக தனிநபர் நீதிமன்றத்தையும் அணுகியுள்ளார். துறையின் அமைச்சர் என்ற முறையில் நான் தெரிவிக்கின்ற கருத்துக்களை மிகவும் கவனமாக பயன்படுத்த வேண்டும். இரு மதங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனையில் எவ்வித சிறு சச்சரவும் வந்துவிடக் கூடாது. சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளை கடந்து அனைவரும் சகோதரத்துவத்தோடு ஒற்றுமையாக பயணிக்கின்ற தமிழகத்தில் எவ்வித பிரச்சனையும் வந்துவிடக் கூடாது என்பதில் ஊடகத்துறையை சேர்ந்த நண்பர்களும் ஒத்துழைப்பு தர வேண்டும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பழனி, இழுவை இரயிலில் பயணிப்போரின் எண்ணிக்கை 32 லிருந்து 72 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பழனி திருக்கோயிலின் பெருந்திட்ட வரைவிற்காக 58 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் வியாபார பெருமக்களுக்காக அவர்கள் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு கடைகள் அமைக்க முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மொ.நா. பூங்கொடி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா. சுகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் எ.பிரதீப், பழனி சார் ஆட்சியர் சீ. கிஷன்குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி ராஜேஸ்வரி சுவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் கே.எஸ்.சுப்பிரமணியன் மற்றும் அறங்காவலர்கள், இணை ஆணையர்கள் எம்.கார்த்திக், எஸ்.மாரிமுத்து மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.4.51 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் கட்டுமானப் பணி:

# ரூ.4.70 கோடியில் நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் கலையரங்கம் கட்டுமானப் பணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை, ஜன.28

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.01.2025) சென்னை, நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் ரூ.4.70 கோடி மதிப்பீட்டில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்டு வரும் கல்லூரிக்கான கலையரங்க கட்டிடத்தினை ஆய்வு செய்தார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னை, நந்தனம், அரசு கலைக்கல்லூரி என்பது 123 ஆண்டுகால பழமையான கலைக்கல்லூரி ஆகும். ஏறத்தாழ நூற்றாண்டு வெள்ளி விழாவினை மிக விரைவில் கண்டு களிக்க கூடிய கலைக் கல்லூரி ஆகும். இதில் பயின்ற மாணவர்கள் ஏராளமான பேர் ஐ.ஏ.எஸ். அலுவலர்களாகவும், ஐ.பி.எஸ். அலுவலர்களாகவும், பெரிய பெரிய துறைகளில் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னையின் மிக பழமையான அடையாளமாக விளங்கும் இக்கல்லூரி 1969ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்களால் காயிதே மில்லத் நகரில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு இங்கே தொடங்கப்பட்டிருக்கிறது.

இக்கல்லூரிக்கு தேவையான அடிப்படை வசதிகள் எல்லாம் தொகுதியின் மக்கள் பிரதிநிதிகள் என்கின்ற வகையில் செய்துக் கொண்டிருக்கிறோம். நான் சென்னை மாநகர மேயராக இருந்தபோது இக்கல்லூரிக்கு 30 கணினிகள் வழங்கப்பட்டு கணினிக் கல்விக்கு மேம்படும் வகையில் பயன்பெற்று வருகிறது.

மேலும் கடந்த செப்டம்பர் திங்களில் நந்தனம் கலைக் கல்லூரியை நந்தவனம் ஆக்குவோம் எனும் தலைப்பில் பசுமை சைதை திட்டத்தின்கீழ் இங்கு பயிலும் மாணவர்கள் பெயரினால் 320க்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டன. அந்த மரங்களை எல்லாம் கடந்த 5 மாதங்களாக மிகச் சிறப்பான வகையில் மாணவர்கள் பராமரித்து வருகிறார்கள். மேலும் அந்த ஒவ்வொரு மரங்களுக்கும் மாணவர்களின் பெயர்கள் சூட்டப்பட்டன.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.01.2025) சென்னை, நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் ரூ.4.70 கோடி மதிப்பீட்டில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்டு வரும் கல்லூரிக்கான கலையரங்க கட்டிடத்தினை ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் நந்தனம் அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர். ஜோதி வெங்கடேஸ்வரன், மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் உடனிருந்தனர்.

அந்த வகையில் மாணவர்கள் இந்த மரங்களை மிகச் சிறப்பாக பராமரித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு மரமும் வீண் போகவில்லை. பசுதை சைதையின் சார்பில் ஏற்கெனவே சைதாப்பேட்டையில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களில் மரம் நடும் பணிகள் செய்திருக்கிறோம் என்று சொன்னாலும், நந்தனம் கலைக்கல்லூரி மாணவர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் அக்கறைப்போல், இவர்கள் இந்த மரங்களின் மேல் கொண்டிருக்கும் பற்றுப் போல் வேறு எந்த கல்லூரிகளிலும் 100% வெற்றியடையவில்லை.

அதேபோல் இந்த கலைக் கல்லூரிக்கு கல்லூரியின் முதல்வர் அவர்களால் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னாள் கலையரங்கம் வேண்டும் என்கின்ற வகையில் கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும் இக்கல்லூரியில் பட்டமளிப்பு விழா தொடர்ந்து நடைபெறுகின்றபோது அந்த விழாவிற்கு பந்தல் போடப்பட்டு ரூ.6 இலட்சம் என்கின்ற வகையில் செலவு செய்துதான் இந்த பட்டமளிப்பு விழாக்களை நடத்த வேண்டியிருக்கிறது.

எனவே இக்கல்லூரி நிர்வாகத்தினருக்கு மிகப் பெரிய அளவில் பணச் சுமை என்பது இருந்து வருகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு இக்கல்லூரியில் கலையரங்கம் வேண்டும் என்கின்ற வகையில் கோரிக்கை வைக்கப்பட்டு இருந்தது. அரங்கத்தை பொறுத்தவரை விழாக்கள் மட்டுமல்லாமல் தேர்வு நடைபெறுகின்ற காலங்களில் பயன்படுத்திக் கொள்வதற்கும், ஒரு சில வகுப்புகளுக்கும் அதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற வகையில் இந்த அரங்கம் இன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

**சட்டமன்றத் தொகுதி நிதி**

சைதை சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 2020-21ஆம் ஆண்டு ரூ.2 கோடி இந்த அரங்கத்திற்கு என்று ஒதுக்கப்பட்டது. மேலும் இந்த அரங்கம் குளிர் சாதனம் செய்யப்பட்ட அரங்கமாக இருக்க வேண்டும் என்கின்ற வகையில் இக்கல்லூரி முதல்வர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. அந்த வகையில் 2022-23ஆம் ஆண்டிற்காக ரூ.1.70 கோடி நிதி கூடுதலாக ஒதுக்கப்பட்டது. மொத்தம் ரூ.3.70 கோடி மதிப்பீட்டில் இந்த பணிகள் முடிவுறும் தருவாயில் இருக்கின்றது.

தற்போது இக்கல்லூரியின் முதல்வர் அவர்கள் இந்த அரங்கத்திற்கு நிரந்தரமாக 1000 இருக்கைகள் அமைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள், பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர் அவர்கள் இதற்கு ரூ.1 கோடி செலவு ஆகும் என்று திட்ட மதிப்பீடு செய்திருக்கிறார்கள். எனவே இந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்கும் ரூ.1 கோடி தர ஒப்புதல் தந்திருக்கிறேன். ஆக ரூ.4.70 கோடி மதிப்பீட்டில் நந்தனம் கலைக்கல்லூரியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின்கீழ் மிகப்பெரிய அளவிலான அரங்கம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த மாதம் இறுதியில் பணிகள் முழுமை பெற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். 1000 மாணவர்கள் அமரக்கூடிய 10720 சதுர அடி பரப்பில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அரங்கம் நந்தனம் கலைக்கல்லூரிக்கு மிகப் பெரிய அளவிலான அமைப்பாக வரவிருக்கிறது.

மேலும் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் விவி கோவில் தெருவில் சமுதாய கூடம் அமைக்கும் பணிக்கு 2017-18 ஆம் ஆண்டில் மேம்பாட்டு நிதியில் ரூ.1.40 கோடி வழங்கப்பட்டது. அந்த பணிகள் தொடங்கியவுடன் அந்த இடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடமாக இருந்தாலும், அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஆக்கிரமிப்பாளர்கள் அரசிற்கு எதிராக வழக்கு தொடுத்தார்கள். இதற்கு அரசிற்கு ஆதரவான தீர்ப்பு நீதியரசர்கள் அவர்களால் வழங்கப்பட்டது.

பிறகு இவ்வளவு கால இடைவெளியில் இந்த பணியினை மீண்டும் தொடங்குவதற்கு பல்வேறு கூடுதல் வசதிகள் செய்வதற்கு ரூ.4.51 கோடி என்கின்ற வகையில் மதிப்பீடுகள் உயர்ந்து சமுதாய கூடம் கட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த பணிகளும் முடிக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

**மருத்துவர்கள் காலிப்பணியிடங்கள்**

2553 மருத்துவப் பணியிடங்களை நிரப்புவதற்கு 24000 மருத்துவர்கள் கடந்த ஜனவரி மாதம் 5 ஆம் தேதி TATA Consultancy நிர்வாகத்தின் மூலம் ஆன்லைன் தேர்வு எழுதியிருக்கிறார்கள். விடைத்தாள்கள் திருத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்போது கோவிட் காலங்களில் யாரெல்லாம் பணியாற்றினார்களோ அவர்களுக்கு Merit மதிப்பெண் தருகின்ற பணி கடந்த 1021 மருத்துவர்கள் நியமிக்கும்போது செய்திருந்தோம். ஏற்கெனவே 500 மருத்துவர்கள் District Health Society மூலம் பணிநியமனம் செய்யப்படும்போது அதற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. மீதமிருக்கும் கோவிட் காலங்களில் பணியாற்றிய மருத்துவர்களுக்கு தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு பணியாற்றியவர்களுக்கு 5 மதிப்பெண்கள், ஒன்றரை ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு 3 மதிப்பெண்கள், ஓராண்டு மட்டுமே பணியாற்றியவர்களுக்கு 2 மதிப்பெண்கள் என்று Merit மதிப்பெண்கள் கொடுக்கும் பணிகள் என்பது தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் (DMS), பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை (DPH) மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி (DME) ஆகிய இயக்குநரகம் மூலம் யார் யாரெல்லாம் மதிப்பெண்கள் வேண்டி விண்ணப்பித்தார்களோ அவர்கள் அந்த காலக்கட்டத்தில் பணியாற்றினார்களா என்பதை உறுதி செய்திடும் வகையில் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் 10 நாட்களில் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் முடிவுகள் வெளியிடப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 2553 மருத்துவர்களுக்கும் விரைவில் பணி ஆணைகள் வழங்கப்படும்.

**ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சருடன் விரைவில் சந்திப்பு!**

ஒன்றிய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் நட்டா அவர்களை சந்திப்பதற்கு நேரம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். கடந்த மாதம் ஒரு சில தேதிகளை ஒதுக்கி இருந்தார்கள். அந்த சமயத்தில் நாம் அங்கே செல்ல முடியவில்லை. இந்த மாதம் தேதி கேட்டிருக்கிறோம். டெல்லியில் 5-ஆம் தேதி நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு பிறகு தேதி தருவதாக சொல்லியிருக்கிறார்கள். வரும் 5 ஆம் தேதிக்கு பிறகு நான் அவர்களை சந்திக்க இருக்கிறேன். நான் அவரை சந்திக்குபோது எந்தெந்த மருத்துவக்கல்லூரிகளில் கூடுதல் மருத்துவர் இடங்கள் தேவைப்படும் காலிப்பணியிடங்களை அவரிடத்தில் தரவிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் கூடுதலாக மருத்துவக்கல்லூரிகள் அமைப்பதற்கான அவசியத்தையும் அவரிடத்தில் தெரிவிக்க உள்ளோம்.

**தமிழிசை சௌந்தர்ராஜன் கேள்விக்கு பதில்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 2010-11 ஆம் ஆண்டிலேயே சட்டமன்றத்தில் ஒரு பதிவை பதிவு செய்திருந்தார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மருத்துவக் கல்லூரி என்பது இந்த அரசிற்கு இலக்கு என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள்.

கடந்த ஆண்டு ஒன்றிய அரசின் பிரதமர் மோடி அவர்கள் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக்கல்லூரி என்கின்ற செய்தியினை சொல்லியிருக்கிறார்கள். இந்த கருத்தை 2011-இல் சொல்லியதே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். அந்த வகையில் தமிழ்நாட்டில் 6 மருத்துவக்கல்லூரிகள் வேண்டும் என்கின்ற கோரிக்கையினை தொடர்ந்து வைக்கப்பட்டு வருகிறது. எப்போதெல்லாம்டு முதலமைச்சர் அவர்கள் பிரதமரை சந்தித்தாரோ அப்போதெல்லாம் இந்த கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. நான் சுமார் 10த்திற்கும் மேற்பட்ட முறை முன்னாள் ஒன்றிய சுகாதார துறை அமைச்சர் மண்சுக் மாண்டவியா அவர்களை சந்திக்கும் போது கோரிக்கை வைத்திருந்தோம்.

குறிப்பாக மயிலாடுதுறை, தென்காசி, பெரம்பலூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் போன்ற மாவட்டங்களுக்கு மருத்துவக்கல்லூரிகள் வேண்டும் என்கின்ற வகையில் கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டு வருகிறது. அதே கோரிக்கை தான் தற்போதைய ஒன்றிய சுகாதார அமைச்சர் நட்டா அவர்களிடம் வைக்க உள்ளோம். முடிந்தால் தமிழிசை சௌந்தர்ராஜன் நட்டா அவர்களிடம் எடுத்துச் சொல்லி மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டிற்கு வழங்குவதற்கு அவரும் உறுதுணையாக இருந்தால் மிகவும் நல்லது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி நேற்று (27.01.2025) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் 2024–25ஆம் ஆண்டில் பதிவு செய்த ஆவணங்களில் அனைத்து ஆவணங்களையும் (100%) உரிய நபர்களுக்கு திரும்ப வழங்கி சிறப்பாக பணியாற்றிய ஏழு சார்பதிவாளர்களுக்கு வெள்ளி பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் உடனிருந்தனர்.